# FRIDAY SERMON

<u>வெள்ளிக்கிழமை குத்து.்.பா 09/05/2014</u>

# IMPOSTERS NEVER SUCCEED IN LIFE

# பொய்யாளர்கள் ஒருபொழுதும் வெற்றியடைவதில்லை

**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

*உலக மக்கள் அனைவரும் “அஸ்ஸலாமு அலைக்கும் வா ரஹ்மத்து ல்லாஹி வா பற்காத்துஹூ தெரிவித்த பிறகு ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் தஷ்ஹீதும் தஅவ்வுசும் சூறா பாத்திஹாவும் ஓதி கீழ்வருமாறு கூறினார்.*

*இங்கு வருகைத் தந்திருக்கிறோர்களே எனது வார்த்தையை கவனியுங்கள்.*

*தனது படைப்பினங்களை வழிகேடின் பால் எட்ட செய்ய முயற்சிக்கின்ற ஒருவரில் இறைவன் தனது தூது செய்தியை இறக்க செய்ய மட்டான். அத்தகைய நபர்கள், இஸ்லாமை அழித்துக் கொள்ள எண்ணுகின்றோர்களும் உண்மை வெளிச்சத்தால் இஸ்லாமின் வனப்பை அதிகரித்துக் கொள்ள இயலாதவர்களும், இஸ்லாமின் நினைவிலும் மதசீர் அமைப்பிலும் கவனமூட்டாதவர்களும் ஆவார்கள். முஸ்ஸீம் மக்களின் மத்தியில் வாத எதிர்வதங்கள் மூலமும் தனது பொய்வாதமும் அறிக்கையும் மூலவும் அதிகமான குழப்பங்களை உருவாக்கிக் கொள்ளுவதற்கே அவர்களின் செயல்கள் வழிவகுப்பது என்பதில் சந்தேகமில்லை.*

*உண்மையில் அத்தகைய பொய்யாளர்களை இறைவன் அவமானிக்க செய்வான். பொய் வாதிகள் இறைக் கோபத்தால் சாபத்துக்குரியவர்களாக மாறிவிடுவார்கள் என்று மட்டுமல்லாமல் அவர்கள் அழிந்து விடவும் செய்வார்கள். மிக அதிக காலமாக நான் இறை வெளிப்பாடுகளால் அருளுக்குரியவனாகியுள்ளேன். ஆனால் இவ்விஷயம் நான் உலக மக்களை தெரிவிக்கவில்லை. இவ்வகை வெளிப்பாடுகளை குறித்து மக்களிடம் கூறிக் கொள்ள தெளிவான இறைக் கட்டளை கிடைத்ததற்கு பின்னரே இதை நான் கூறிக் கொண்டது. ஆதனால் எனது நோக்கம் தீமையையும் தவறுகளையும் எதிரிடுவதும் அநீதிக்கு எதிராக போராடுவதும், இறை பக்தர்களை நேர் வழியின்பால் நடத்திக் கொள்வதும் ஆகும். நிராகரித்துக் கொள்போர்களும் அகந்தையுடையவர்களும் வழிமாறி கொள்வார்கள். திவ்விய வல்லமையுடைய உண்மை ஒளி அவர்களின் வாதங்களை தூக்கி வீசிக் கொள்ளும்.*

*இஸ்லாமுடையவும் முஹமதுநபி(ஸல்)வுடையவும் பகையவர்கள் ஆயிரத்துக்கு மேற்பட்ட நூல்களும் கட்டுரைகளும் வெளியிட்டிருகின்றார்கள். இஸ்லாமையும் தூய*

*தூதரையும் அவமானிக்கின்ற ஏராளமான கார்ட்டுண்களும் உலகம் முழுவதும் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. அடிப்படையற்ற ஆரோபணங்களும் இழிவுகளும் அத்தோடு பொது மக்கள் மத்தியில் இஸ்லாமை அவமானிக்கின்ற நபர்களையும் கொண்டு உலகம் நிறைந்துள்ளது.*

*எனது கண்ணுநீர் இஸ்லாமிற்காகவே ஆகும். முன் காலங்களில் இருந்த இஸ்லாமின் விலையும் நிலையும் அன்று இழந்து விட்டது. இவ்விஷயங்களைப் பற்றி சிந்தித்து நான் வேதனைகளுக்கு ஆளாகிய நாள்கள் சிறிதல்ல. முஸ்லீம்களின் ஆன்மிக சீரழிவை நினைத்து நான் கவலைப்படுகிறேன். மக்கள் நேர் வழியில் இருந்து தாடுமாறி மருபூமியின்பால் செல்கின்றன. ஓவ்வொருவரும் வழிகேடினுடையவும் அழிவினுடையவும் பாதைகளை சுயமாகவே தேர்ந்தெடுத்து செல்கின்ற சூழ்நிலைகள்*

*அதே வேளையில் முஸ்லீம்களில் பலர்களும் தீனுல் இஸ்லாமை விட்டு ஏனைய மதங்களை நோக்கி செல்கின்றார்கள். சமூகத்தில் உன்னதமானவர்களும் பெரிய குடும்பங்களை சார்ந்தவர்களும் பௌதீக சுகங்களுக்கும், மதத்தின் நல்லொழுக்கக் கட்டுபாடுகளில் இருந்துள்ள இரட்சிப்பிற்குமாகவே இவ்வாறு செல்லது. சில சடங்குகளில் மட்டும் பங்கேற்றுக் கொண்டு மதத்திற்காக நாங்கள் எல்லாம் செய்கின்றோம் என்று சுயமாக நம்பிக்கை கொள்கின்றோர்களும் முஸ்லீம்களில் காணலாம். பௌதீகத்தின் பால் பெருபன்மை மிக்க நபர்களும் சாய்ந்து விட்டார்கள். இறையச்சம் அவர்கள் இழந்து விட்டார்கள். இறையன்பு என்னவென்று உட்கொள்ளவும் அவர்களுக்கு முடியவில்லை. மற்றும் மார்கங்களிலாகும் அவர்கள் பௌதீக சுகத்தில் சாவிகளை காண்கின்றார்கள். இதயம் கொண்டு மாற்று வழிகளை அப்படித் தேடிக் கொள்கின்றார்கள். ஓவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான முஸ்லீம்கள் இறை பிராகாஷத்தை விட்டு பௌதீகத்தின் இருள் நிறைந்த வழிகளை தேர்ந்தெடுக்கின்றார்கள்.*

*அதனால், அவர்களின் ஈமானுக்கு புது வாழ்வுக் கொடுத்திட சொர்கீயமான அடையளங்கள் அவசியமாகும். அவர்களின் உலமக்கள் அவர்களை எழுப்பிட பல வருடங்களாக முயற்சித்து வருகின்றார்கள். ஆனால் அவர்களோ தூங்கி கொண்டேயிருகின்றன. உபதேசங்கள் நிறைந்த சொர் பொழிவுகள் விணாகிவிட்டது. கடினமான இதயம் கொண்டவர்களாக அவர்கள் பரிணமித்தார்கள். நீதியுடையவும் மரியாதையுடையவும் நேர்மையுடையவும் சீமையினை அத்துமீறப்பட்டது. இதயங்கள் அந்தகாரத்தில் முழ்கியது. சிந்திப்பின் தன்மை இழக்கப்பட்டது. உணர்சிகளுக்கு அவர்கள் அடிமையானார்கள். பார்த்தாலும் அவர்களால் காண முடியாத நிலையும், கவனித்துக் கொண்டாலும் அவர்களால் புரிந்து கொள்ள இயலாத நிலையும் உருவானது.*

*இத்தகைய ஆன்மிக நோய்களில் இருந்துள்ள இரட்சிப்பிற்கு சொர்கீய அடையாளங்கள் ஒன்றுக்கு பிறகு மற்றொன்றாக விளம்பரப்படுத்தி வர வேண்டும். ஏனொனில் ஈமான் அவர்களை விட்டு வெகு தூரம் சென்றுள்ளது. சந்தேகங்கள் மனிதனை*

*கவலையின் பால் எட்ட செய்துள்ளது. மனுகுலத்தில் பெருபான்மை மக்களும் இவ்வுலகை குறித்து மட்டுமே சிந்திக்கின்றார்கள். ஈமானுடையவும் இஸ்லாமுடையவும் விஷயத்தில் அவர்கள் கவனமில்லதாவர்கள் ஆவார்கள். பௌதீகத்தின் மேல் அவர்களுக்கு அளவிற்கு அதிகமான ஆசைகள் எற்பட்டுவிட்டது.*

*பெரும்பாலான முஸ்லீம்களும் இன்று ஈமானின் வழியில் அல்ல. பாவங்கள் அவர்களின் அந்தஸ்தையும் விலையையும் எரித்து விட்டது. மத மறுப்பின் பாதையில் அவர்கள் சென்றடைந்தார்கள். அதனால் பெரிய பாவங்களிலும் சந்தர்ப்பவாதங்களிலும் அவர்கள் அடிமைகளான போது, சாத்தனின் மக்களாக அவர்கள் மாறிய போது ஒரு உபதேசத்திற்கும் அவர்களை இரட்சித்துக் கொள்ள முடியவில்லை. ஒரு எச்சரிக்கையாளரின் எச்சரிக்கையும் அவர்களுக்கு பலனளிக்கவில்லை. அவர்களின் நிலைபாடுகளில் எவ்விதமாற்றமும் எதிர்பார்த்துக் கொள்ள வேண்டாம். தெளிவான அடையாளங்களும் அற்புத அத்தாட்சிகளும் அவர்களுக்கு முன்னால் வெளிப்படுத்திக் காட்டுவதற்கே அல்லாஹ் இந்த நூற்றாண்டில் ஒரு தூதனை நியமித்திருப்பது. ''முஹய்தீன்'' கலீ.:.பத்துல்லாஹ் என்ற நிலையில் இஸ்லாமின் மகத்துவத்தை எடுத்துரைக்கவே இந்த எளியவனை இறைவன் அனுப்பி வைத்துள்ளான்.*

*இந்த உரையினை முடித்துக் கொள்ளுவதற்கு முன் ஒரு விஷயத்தை தெரிவிக்கின்றேன். முன் விதியின் அடிப்படையில் நான் கூறிய இவ்விஷயங்களை தூக்கி வீசுவதற்கு முன், இவ்விஷயங்களை கவனத்தோடு பார்க்க வேண்டுமென்றும், அதற்கு பிறகு அல்லாஹ் உங்களை அழைக்கின்ற வழியின் பால் நீங்கள் பயணம் மேற்கொள்வீர்கள் என்றும் நான் எண்ணுகிறோன். நேர்மையானதும் ''தக்வாவ''க்கு உட்பட்டதுமான தீர்மானங்கள் எடுத்திட இறைவன் உங்களுக்கு உதவி புரிவானாக என்று நான் பிராத்தனை செய்கின்றேன். ஆமீன்*

**Issued by**
**Jamaat UI Sahih Al Islam**
*Dawa Department*
Tamil Nadu (Regd.No:A/693)
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by**
**Azim Ahmad**
*Sadr Sahibul Faraj*
Kerala/Tamil Nadu
Cell: 9947181650
9789180817